பிறந்து வளரும் பெரிய பணி

வங்கிக் கலைச் சொல்லாக்கம்

தமிழ்த்தொண்டர்
கோ. முத்துப்பிள்ளை

செந்தமிழ்ச் செல்வி
(சிலம்பு-58, பரல்-5 இல் வெளிவந்தது)
12—1—1984

பிறந்து வளரும் பெரிய பணி

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை

மாக்கவி பாரதி நகர், சென்னை-6000 39.]

வங்கிக் கலைச்சொல்லாக்கம்

அரசுத்துறைகள் அன்றாடம் பெருகிவருவதைப்போன்று, மொழித்துறைகளும் அன்றாடம் பெருகிவருகின்றன. புதிய துறைகள் எத்தனை என்பதைக்கூட எண்ணிப்பார்ப்பது இயலாத செயலாக இருக்கின்றது. அயல்மொழியாகிய ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெற்று இலங்குவதை நாம் காண்கின்றோம். அதே போன்று அன்னை மொழியாகிய அருந்தமிழும் அனைத்துத் துறைகளிலும் ஆற்றல்பெற்று விளங்கவேண்டுமென்பது நம் அவாவாகும். துறைதோறும் துறைதோறும் தமிழன்னை நிறைவுபெற்றுத் திகழ வேண்டுமென்பது நமது பேரார்வமாகும்.

திருக்குறளில் இல்லாத கருத்துகள் எவையுமே இல்லையென்னும் அளவிற்குத் தித்திக்கும் செய்திகளைத் திக்கெட்டும் பரவச் செய்தார் திருவள்ளுவர். அதேபோன்று அன்றாடம் தேவைப்படும் பொதுமைக் கருத்துகள் பலவற்றைப் போற்றியுரைத்துள்ளார் மாக்கவி பாரதி. தமிழ் வளர்ச்சி குறித்துப் பாரதியார் தந்துள்ள இலக்கண விளக்கத்தை நாம் யாவரும் அறிந்துள்ளோம். அவர் கூறுகிறார் :

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
        தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
        தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
        சொல்வதி லோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
        அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

பழம் பெருமைகளை நிரம்பப்பெற்றவர்கள் நாம். புதுப் பெருமைகளும் நமக்குக் குறைவின்றிப் பெருகவேண்டும் என்பது பாரதியாரின் வேணவாவாகும். ஆகவேதான் நல்லதொரு செயல் திட்டமாகப் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று அவர் நவில்கின்றார். இந்தத்

★

திட்டம் வெற்றிபெறக் கிளர்ச்சியூட்டும் பொன்னுரை ஒன்றையும் அவர் வழங்குகின்றார்.

"சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

ஈண்டுப் பாரதியார் குறிப்பிடும் கலைச்செல்வங்கள் யாவும் இந்நாளில் நம் அண்டையிலேயே வந்து குவிந்துகிடக்கின்றன. ஆயினும் அவை யாவும் இன்னமும் ஆங்கிலத்திலேயே இருந்துவருகின்றன வன்றோ? அந்தக் குறையைத்தான் இன்று நாம் போக்கியாக வேண்டும்.

தமிழன்னை விரைந்து முன்னேறிவரும் ஒருசில துறைகளை நாம் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். முதலாவதாக Administrative language என்று குறிப்பிடப்பெறும் ஆட்சிமொழித் துறையை எடுத்துக்கொள்வோம். இவ்வகையில் அரசு அமைத்துள்ள தமிழ் வளர்ச்சித் துறையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற தனியார் நிறுவனங்களும் ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் போன்ற தமிழறிஞர்களும் ஆற்றிவரும் தொண்டுகள் அளவிடற் பாலனவல்ல. ஆட்சிச்சொல் அகராதியின் நான்காம் பதிப்பை அண்மையில் சிறந்த முறையில் வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சித் துறை தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது. அடுத்து Legal language என்று சொல்லப்படும் சட்டமொழியின் வளர்ச்சிக்காக அமைக்கப் பெற்றுள்ள ஆணையத்தைக் குறிப்பிடலாம். மறைந்த மாமேதைகள் நீதியரசர் மா. அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் இயங்கிய ஆணையமும் நீதியரசர் எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் அமைந்த ஆணையமும் அரிய சட்டச்சொல் அகராதிகளை வெளியிட்டு அருந்தொண்டாற்றியுள்ளன. மூன்றாவதாகத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தைக் குறிப்பிடவேண்டும். இது கல்லூரிப் படிப் பிற்குத் தேவையான நூல்களைக் கற்கண்டுத் தமிழில் வெளியிட்டு அன்னைக்குச் சிறப்பான அணிகளைச் சூட்டிவருகின்றது. இந்த நிறுவனமும் ஒருசில அகராதிகளை வெளியிட்டு உதவியுள்ளது. இவ்வாறு ஆட்சித்துறைத் தமிழிற்கும் சட்டத்துறைத் தமிழிற்கும் அறிவியல்துறைத் தமிழிற்கும் பற்பல நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன.

இப்போது வங்கித் தமிழை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் தங்கப் பணிகளைச் சிறிது ஆராய்வோம். வங்கி களுக்கெல்லாம் மாதிரி வங்கியாய்த் திகழும் பாரத ஸ்டேட் வங்கியின் பணிகள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. எப்பக்கம் திரும்பினும் எழிலார்ந்த தமிழ்ச்சொற்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. பெயர்ப்பலகைகள் யாவும், அலுவலகத்தின்

உள்ளும் புறமும், அழகிய தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்று அலுவலகத்தை அணிசெய்கின்றன. Teller என்பவர் யார் என்று தெரியாமல், பலர் அப் பெயரைச் ''சொல்பவர்'' என்றும் ''மொழிபவர்'' என்றும் கூறக்கேட்டுள்ளேன் நான்! பாரத ஸ்டேட் வங்கியினுள் நுழைந்து பார்த்தவுடன்தான், அவர் வேறு யாருமில்லை, அவர்தான் ''விரைவுக் காசாளர்'' என்பதை நான் அறிந்து கொண்டேன். இவருக்குப் ''பெட்டகர்'' என்னும் புதிய பெயரும் இப்போது அமைக்கப்பட்டுள்ளது. ''காசாளர்'' என்னும் பெயரைக் கூடப் பயன்படுத்தாமல் பல வங்கிகள் மாசுபடிந்த நிலையில் இயங்கி வருகின்றன. ''காசு'' என்னும் தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் Cash என்ருகி அதன்பின்னர் Cashier என்னும் பெயர் ஏற்பட்டது. இந் நிலையில் தமிழ்க் காசுவைப் பயன்படுத்திக்கொள்வதில் தயக்கம் காட்டத் தேவையில்லையே! ''விரைவுக் காசாளர்'' என்னும் பெயர், அந்தக் காசாளர் ஆற்றும் பணியைக் கருத்தில்கொண்டு அமைக்கப்பட்ட நல்ல பெயராகும். ஆயினும் தமிழ்த் திட்டத்தைப் பாரத ஸ்டேட் வங்கி விரைந்து செயலாற்றுவதையும் இந்தப் பெயர் பாங்குற எடுத்துக்காட்டுகின்றது என்று எண்ணி மகிழ்ந்தேன். பணம் புழங்கும் இடங்களில் தமிழ் புழங்க வாய்ப்பில்லை என்று சிலர் தவருன கருத்தை எடுத்துக் கூறிவந்தனர். இதனை அடியோடு மறுக்கும் வகையில் அன்னையை அரியணையில் ஏற்றி அகம் மகிழ்கின்றது இந்த வங்கி.

பாரத ஸ்டேட் வங்கி ஏற்கெனவே ''வங்கிக் கலைச் சொற்கள்'' என்னும் சிறிய நூலை வெளியிட்டுள்ளது. இதில், பெரும்பாலும் வங்கியின் பல்வேறு துறைகளின் பெயர்களும் வங்கி அதிகாரிகளின் பதவிப் பெயர்களுமே காணப்பெறுகின்றன. இந்த வங்கியின் சார்பில் திரு. இரா. நமச்சிவாயம் என்னும் அதிகாரி மதுரையில் 1981 சனவரியில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று படித்துச் சிறப்பித்தார்.

அன்று சிறிய செடியாக இருந்த வங்கித் தமிழ், இன்று அடையாறு ஆலமரம் போன்று மாபெரும் மரமாக வளர்ந்து, விழுதுகள் விட்டுக் கண்கொள்ளாக் காட்சியாக மாறியுள்ளது. ஆம், பாரத ஸ்டேட் வங்கி, வங்கிக் கலைச்சொற்கள் கொண்ட பெரிய அகராதியை, பேரகராதியை, இப்போது தொகுத்துள்ளது. இனிக்கும் மொழிபெயர்ப்புகளைக் கொண்டு இலங்குகின்றது இந்த அகராதி. நுட்பங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது இந்த அகராதி. வெறும் மொழிபெயர்ப்பாக மட்டும் அமையாமல், மொழியாக்கம் என்னும் சிறப்புநிலை பெற்று நடைபோடுகின்றது இந்த அகராதி. தெற்றெனப் பொருள்

விளங்கும் வகையில் முற்றிய சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த அரிய அகராதியை அருந்திறலுடன் தொகுத்துள்ள பெருமை கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களையே சாரும்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரியாகப் பணியாற்றிவரும் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் நாடறிந்த நல்ல எழுத்தாளராவார். பல இனிய நூல்களின் ஆசிரியர், சிறந்த கவிஞர். இவருடைய செந்தமிழ்ப் பாடல்களும் சுவைமிக்க நாடகங்களும் அனைத்திந்திய வானொலியிலும் சென்னைத் தொலைக்காட்சியிலும் பெருமுழக்கம் செய்துவருகின்றன, கசப்பான உண்மைகளையெல்லாம் தெளிதேனில் குழைத்து ஊட்டி மக்களைத் திருத்தும் மாண்புமிக்கவர் இவர். இவருடைய தளராத தமிழார்வத்தாலும் அயராத உழைப்பினாலும் ஆகிவந்துள்ளது இந்தப் பேரகராதி.

இந்த அரிய பணிகளுக்கெல்லாம் மூலமுதல்வராக விளங்கும் பெருமகனார் தலைமைப் பொது மேலாளர் உயர்திரு. கபில் தேவ் நய்யார் அவர்களாவார்கள். வீரப்பரம்பரையில் வந்துள்ள இவர் இன்று தமிழ் வீரம் காப்பதிலே தளராது செயற்பட்டுவருகின்றார். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இவர் எஞ்சாப் புகழை ஈட்டிவருகிறார். தமிழ்மொழியின் தனிச்சிறப்பை உணர்ந்து, தாமே அதனைக் கற்றுக்கொள்வதற்கும் கலைச்சொல் அகராதியைத் தொகுக்கும் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்கும் மனமுவந்து முன் வந்துள்ளார். ''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்'' பெற்று வானுயர் வடிவாய்த் திகழும் இவரை எவ்வளவு போற்றினாலும், அது தமிழன்னையைப் போற்றியதாகவே அமையும்.

அரிதின் முயன்று ஆக்கப்பெற்றுள்ள பெரிய அகராதியைச் சரிபார்க்கும் பொறுப்பு பதினைன்கு பேர்கள் கொண்ட தமிழறிஞர் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பெற்றுள்ளது. இந்தக் குழுவில் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார், டாக்டர் ஔவை து. நடராசனார், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், திரு. கோ. முத்துப்பிள்ளை, பேராசிரியர் இரா. மதிவாணன், டாக்டர் பொற்கோ, டாக்டர் க. ப. அறவாணன், திரு. ஏ. ஏ. ஹக்கீம், பேராசிரியர் ம. இலெ. தங்கப்பா, திரு. சோ. சேஷாசலம், டாக்டர் கவிஞர் த. கோவேந்தன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கழக ஆட்சியாளர் இரா. முத்துக்குமாரசாமி, டாக்டர் விக்கிரமன் ஆகிய அறிஞர் பெருமக்கள் இடம் பெற்றுள்ளனர். உருவாக்கப்பெற்றுள்ள அகராதியில் அமைந்துள்ள சொற்கள் பதினான்காயிரம் ஆகும். ஓரறிஞர் ஓராயிரம் சொற்களை ஆய்வுசெய்வது எளிதாக இருக்கும் என்னும் கருத்தில் பதினான்கு அறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளனர் என்பதை எளிதில் ஊகித்தறியலாம். பதினான்கு என்னும் எண்ணிக்கையில்

ஏதேனும் ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்யும் என்று என் மனம் எண்ணியது.

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
புண்ணியப் புனல்கள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றேவினன் அரசன் என்றாள்"

என்னும் கம்பராமாயணப் பாடல் நினைவிற்கு வந்தது. பதினான்கு ஆண்டுகள் தவம் செய்வதற்காக இராமன் காட்டிற்குச் சென்றான். அதைப் போன்று இந்தப் பதினான்கு அறிஞர்களும் தவம்செய்து நல்ல பல மொழியாக்கங்களைச் செய்துதர வேண்டுமென்பது வங்கியாரின் எண்ணமாக இருக்கலாமோ என்று நினைந்தேன். பொறுப்பின் ஆழம் அப்போதுதான் புலப்பட்டது.

கலைச் சொல்லாக்கக் குழுவின் முதற்கூட்டம் இனியதொரு விழாவாக 13-11-83 அன்று சென்னையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு உயர் நீதிமன்ற நீதிபதி மேதகு நீதியரசர் எஸ். மோகன் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள். வங்கியின் உயர் அதிகாரிகள் உயர்திரு. கபில் தேவ் நய்யார், எஸ். சீனிவாசன், வி. எம். டி. ஜோஷி, ஜி. சத்தியமூர்த்தி, ஈ. ஜே. சௌந்தரராஜன், ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்த விழாவின் ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்ததோடல்லாமல், இனிய சொல் விருந்துகளையும் படைத்துத் தந்தார்கள். மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் வலம்புரி ஜான் அவர்களும், சிலம்பொலி சு. செல்லப்பனார், டாக்டர் ஔவை து. நடராசனார், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் போன்ற அறிஞர் பெருமக்களும் சொற்பெருக்காற்றி வங்கியின் தமிழ்ப் பணியினைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

உருவாக்கியுள்ள வங்கிக் கலைச்சொல் அகராதியின் அருமை பெருமைகளை வாசகர்களாகிய தாங்களே நேரில் படித்துப் பார்த்து மகிழ்ச்சியுறுவதுதான் அதனை ஆக்கியோர்க்கு ஊக்கமூட்டும் அரிய செயலாக அமையும். எனினும் ஒருசில சிறப்புக் கூறுகளை மட்டும் நான் ஈண்டு எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

இந்த அகராதி அரியதொரு கலைச்சொற் பெட்டகமாகும் என்று கூறுவது எள்ளளவும் மிகையாகாது. மிகப் பெரும்பான்மை யாக இடம் பெற்றுள்ள சொற்கள் வங்கித் துறைக் கலைச் சொற்களே

யாகும் என்று கூறத் தேவையில்லை. ஆயினும் தேவையான அள விற்குப் பிற துறைச் சொற்களும் இதில் பயின்று வருகின்றன. ஆட்சியும் சட்டமும் எத்துறைக்கும் தேவைப்படும் இரண்டு கண்க ளாகும். இவை குறித்த கலைச் சொற்களும் இவ்வகராதியில் பொருத்தமான அளவிற்குச் செறிந்து நிற்கின்றன. பெரும்பான்மை யாக இடம் பெற்றுள்ள சொற்கள் என்னும் அடிப்படையில் கண் ணுறும்போது, வங்கிக் கலைச்சொற்கள், சட்டக் கலைச்சொற்கள், ஆட்சிச் சொற்கள் ஆகிய மூன்றும் இந்த அகராதியை அணி செய் கின்றன. இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழாக வகுத்துத் தந்தனர் நம் முன்னோர். இப்போது இந்த அரிய கலையகராதி வங்கித் தமிழ், சட்டத் தமிழ், ஆட்சித் தமிழ் என்னும் புதிய முத் தமிழ்க் களஞ்சியமாக முகிழ்த்துள்ளதை எண்ணி யாவரும் பெரு மிதம் கொள்ளலாம்.

''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று'' என்று பாடுகிறார் பட்டினத்தார். அந்த அளவிற்கு நாங்கள் சென்றுவிட வில்லை. இரண்டே மாதங்கள் இடையறுப் பணி புரிந்துள்ளோம். வங்கியின் சார்பில் பொறுப்பேற்றுள்ள உயர்திரு. ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் ஓய்வு சிறிதுமின்றி இருபத்து நான்கு மணி நேரமும் ஆய்வு செய்துள்ளார் என்று கூறின், அது சிறிதும் மிகையாகாது. தொடக்க விழாவைத் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நாங்கள் ஒன்றுகக் கூடிப் பொதுவான கலைச் சொற்கள் பலவற்றைக் கூர்மையாக ஆராய்ந்துள்ளோம். இந்தக் கூட்டங்களில் வங்கியின் உயர் அதிகாரிகள் உயர்திரு. ஜி. சத்திய மூர்த்தி அவர்களும் ஈ. ஜே. சௌந்தரராஜன் அவர்களும் எங்களுக் குப் பெரும் வழிகாட்டிகளாக அமைந்து உதவியுள்ளனர். வங்கிச் சொற்களின் நுணுக்கங்களையெல்லாம் வாரிவாரி வழங்கி அலசிக் காட்டிய பெருமை இவ்விரு அறிஞர்களையுமே சாரும். எத்துறைச் சொற்களாயினும் அவற்றை மெத்தவும் எளிதாக்கி இனிது விளக்கிக் காட்டினர் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்கள். உயரிய மொழி பெயர்ப்பு உருண்டோடி வரும் வரையில், விளக்கத்தை இடை நிறுத் தாது, தொடர்ந்து செல்லும் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர் களின் நுண்ணறிவு பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். வங்கித் துறைச் சொல்லாயினும் சட்டத்துறைச் சொல்லாயினும் ஆட்சித் துறைச் சொல்லாயினும் அனைத்துத் துறைகளிலும் பயிலறிவு மிக்கவர் உயர்திரு. ஜி. சத்தியமூர்த்தி அவர்களாவார்கள்.

பாரத ஸ்டேட் வங்கி அமைத்துள்ள மொழித் துறையின் முதல்வராவார் உயர்திரு. ஈ. ஜே. சௌந்தரராஜன் அவர்கள். உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து உயர்ந்தோங்கி நிற்கும் இவர் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் இயல்பினர். ஆயினும்

தம்மொத்த பிற அறிஞர்களைப் பேணுவதில் கரும்பு மனிதரானவர். இந்த நல்லறிஞர் பல பொன் போன்ற மொழி பெயர்ப்புகளை எடுத்து வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

தொடக்க முதல் கடைசி வரை, தொட்டதெல்லாம் பொன்னாக, அள்ள அள்ளக் குறையாமல், எழிலார்ந்த சொற்களை ஏராளமாக வழங்கி வருபவர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆவார்கள்.

குழு அறிஞர்கள் தந்துள்ள அரிய மணிகளின் சிறு சிறு தொகுப்புகளை விரைவில் தங்கள் பார்வைக்கு வைக்க இருக்கின்றேன் என்பதை இந்தக் கட்டத்திலேயே சொல்லிவிட விரும்புகின்றேன். நிலவரை, கலந்தொடு துறை, அமைவுறு வாடிக்கையாளர், சமை திட்டம், ஐந்தொகை அறிக்கை ஆகிய அழகு தமிழ்ச் சொற்களுக்கு உரிய ஆங்கிலம் என்ன என்று சிறிதுநேரம் சிந்தித்துக் கொண்டிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அலுவல்முறை சாராத அறிஞர் வரிசையிலே, முதலிடம் வகிப்பவர் டாக்டர் கவிஞர் த. கோவேந்தன் அவர்களாவார்கள். இவர் ஓர் அதிசய மனிதர். தமிழ்ப் புலமையும், தன்னடக்கமும், நிறைபுலமும், சலியா உழைப்பும், சிறிதும் நெறிதிறம்பாச் செந்தமிழ்ப் பற்றும் ஒன்றாக உருவெடுத்தவர் இவர். இவருடைய சேவை வங்கிக்குக் கிடைத்துள்ளமை பெரும் பேறுகும்.

ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களுக்கும் பிற கூட்டங்களுக்கும் தவறுது வருகை தந்து சிறப்பித்த செந்தமிழ் அறிஞர்களைப் பெரிதும் பாராட்டுதல் வேண்டும். இவ் வகையில் உழைத்துள்ள டாக்டர் கவிஞர் த. கோவேந்தன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, டாக்டர் க. ப. அறவாணன், சோ. சேஷாசலம், இரா. முத்துக் குமாரசாமி ஆகியோரை எவ்வளவு போற்றினாலும் தகும். இந்த அறிஞர்களை எண்ணும்போதெல்லாம் உள்ளம் பூரிக்கும், உடல் புல்லரிக்கும். தெள்ளுதமிழ்ச் சொற்களை மின்னொளிபோன்று அள்ளி வழங்கியுள்ளனர் இவர்கள். இந்தியன் வங்கியில் உயர்பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் வங்கிக் கலைச்சொற்களுக்குப் பயனுள்ள அரிய விளக்கங்களைத் தந்து உதவியுள்ளார். தமிழில் அரிய சட்ட நூல்களை இயற்றியுள்ள சோ. சேஷாசலம் அவர்கள் சட்டக் கருத்துகள் பலவற்றைப் பட்டறிவுகொண்டு துலக்கியுள்ளார். தொன்னெறி போற்றி நன்னெறி காட்டி நல்ல தமிழாக்கங்களைத் தந்துதவியுள்ளார் டாக்டர் க. ப. அறவாணன். முழு ஈடுபாட்டோடு குழுவில் சிறந்து விளங்கும் இன்னொரு பேரறிஞர் இரா. முத்துக்குமாரசாமி அவர்களாவார்கள்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இன்றைய ஆட்சியாளராக இலங்கும் இவர் பழைய ஆட்சியாளர் வ. சுப்பையா அவர்களின் பண்பு வழியில் நடை போடுகின்றார். தண்டமிழ்ப் புலமையும், நிறுவன நெறிகளும், சென்னைத் தமிழின் செவ்விய நடைகளும், ஆட்சிமொழியின் மாட்சிமைகளும் நிரம்பி நிற்பவர் இரா. முத்துக் குமாரசாமி அவர்களாவார்கள். இவர் தந்துள்ள ஊக்க மொழி பெயர்ப்புகள் உள்ளம் கவர்வனவாகும்.

கூட்டுத் தவத்தின் பெருமையை ஏட்டில் எழுத இயலாது என்றே கருதுகின்றேன். பல நாட்களாகத் தலைமறைவாகியிருந்த தண்டமிழ்ச் சொற்களெல்லாம் முனைந்து முனைந்து முன்வந்து காட்சி தந்தன. அவற்றை "எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்று வாழ்த்தி வரவேற்று ஏற்ற இடங்களிலெல்லாம் அமைத்துக்கொண்டோம்.

Bill of lading என்னும் தொடர் என்றுமே இடர்தந்து வந்த ஓர் அரிய தொடராகும். ஆனால் அது சுவைத்து மகிழும் செந் தமிழ்த் தொடராக மாறிவிட்டது. கருத்து விளங்கவேண்டும், அதன்பின்னர் கனிந்த தமிழ்ச்சொல் ஓடிவர வேண்டும். நம்முடைய ஐயங்களையெல்லாம் கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டால் கற்கண்டு சொற்கொண்டு எளிதில் அமைத்துவிடலாம், ஆம் "கலச் சரக் கேற்றுச் சீட்டு" என்னும் இனிய மொழிபெயர்ப்பைப் புதிய அகராதி யில் சுவைத்து இன்புறலாம்.

கப்பலைப்பற்றிப் பேசியவுடன் இன்னொரு தொடர் நினைவிற்கு வருகின்றது. Port of Call என்னும் தொடர் ஆங்கிலத்தில் மிக அழகிய தொடராகும். சரக்குகளை ஏற்றவும் இறக்கவும், பயணிகளை ஏற்றிக்கொள்ளவும் இறக்கிவிடவும், வழியில் கப்பலுக்கு ஏற்பட்ட கெடுதல்களைப் பழுதுபார்க்கவும், குறிப்பிட்ட துறைமுகங்களை எட்டிப் பார்க்கின்றது அந்தக் கப்பல். இத்தனை கருத்துகளையும் Port of Call என்னும் மூன்றே சொற்களில் அடக்கிக்கொண்டு அழகு நடை பயில்கின்றது ஆங்கிலம். அந்த முறையில் நம் அன்னை மொழியி லும் அமைக்க இயலுமா என்னும் ஏக்கமும் கவலையும் பெருகி விட்டன. "இயலும், இதோ இருக்கிறது தமிழில்" என்று குழு உறுப்பினர் கொடுத்து உதவினர். Port of Call ஆம், அதுதான் "கலம் தொடு துறை." இவற்றுள் எந்தத் தொடர் அழகில் மிக்கது என்று அறிந்துகொள்ள இயலாவண்ணம் அழகுப் போட்டியன்றோ நடந்தவண்ணம் இருக்கின்றது.

Industrial Complex, Hotel Complex என்றெல்லாம் பேசி வருகின்றோம். Complex என்னும் சொல், பொருளிலும் இயல்பி

லும் சிக்கலாக இருந்து வருகின்றது. தொழில் தொகுப்பு, உண வகத் தொகுப்பு என்று சொன்னால் பொருள் விளங்குகின்றது. ஆயினும் ஏர்பெற்று இலங்கவில்லை. நீண்ட காலமாகவே இந்தச் சொல் ஒரு வழுக்கல் நிலமாகவே இருந்துவந்துள்ளது. இந்தக் Complex என்னும் (Complicated) சிக்கலான சொல்லைப் பார்த்து, குழு உறுப்பினர் ஒருவர் புன்முறுவல் பூத்தார். வைரமணி ஒன்றை வழங்கி மகிழ்ந்தார். ஆம். Complex என்றால் ''இணைவம்''. ''இணையம்'' நமக்குத் தெரியும், அது Federation ஆகும். இந்த யகரத்தை வகரமாக்கிக் கட்டித் தங்கம் ஒன்றை வெட்டிக்கொடுத்து விட்டார் நண்பர்.

Underwriter என்னும் சொல் எல்லா எழுத்தாளர்களையும் (writerகளையும்) ஏமாற்றி வந்தது! வங்கி அதிகாரிகள் இந்தச் சொல்லிற்கு ஆங்கிலத்திலுள்ள செவ்விய பொருள்களையெல்லாம் சிறப்புற நவின்றனர். அதன் பின்னர் Underwriter ''எஞ்சு பங்கு ஏற்பாளர்'' என்னும் இனிய பெயரை ஏற்றுக்கொண்டார்.

''கணக்குப் பார்த்தால் பிணக்கு வரும்'' என்று சொல்வார்கள். ஆயினும் பிணக்கு வராமல் காத்துக் கணக்குப் பார்க்கும் இடம்தான் வங்கி என்னும் நிறுவனமாகும். வங்கித் தொடர்கள் வண்டித் தொடர்கள்போலக் கண்சிமிட்டி நம்மைக் கலங்க வைக்கும் ஆற்றல் பெற்றனவாகும். Pro rata rate என்னும் தொடரை எண்ணிப் பாருங்கள். ஓட்டம் பிடித்துவிடலாம் என்னும் எண்ணந்தான் உடனே தோன்றும். ஆயினும் அச்சம் சிறிதும் கொள்ளாமல் ''விகித அடிப்படை வீதம்'' என்னும் மொழிபெயர்ப்பைக் குழு நல்கி விட்டு, அந்த வண்டியில் ஏறிக்கொண்டு பயணம் செய்யப் புறப்பட்டு விட்டது. ''இல்லை'' என்னும் சொல்லுக்குத் தமிழில் இடம் இல்லை.

Photostat copy என்னும் தொடர் எங்காவது வந்துவிட்டால் என்ன செய்வது, அதற்குரிய மொழிபெயர்ப்பு தெரியவில்லையே என்று நான் அஞ்சிக்கொண்டிருந்தேன். யாரும் இதைப்பற்றிப் பேசாமலிருந்தால், அதுவே அவர்கள் எனக்குச் செய்யும் பேருதவி யாகவிருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். திடீரென்று அந்தத் தொடர் மேடையில் ஏறி, உலாவரத் தொடங்கிவிட்டது. அச்சத் திற்கு அளவே இல்லை. முகமெல்லாம் வெளுத்துவிட்டது. இந்தக் காட்சியை ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் எப்படியோ கண்டு கொண்டார். அவர் ஓர் ஒளி பொருந்திய பெயர்ப்பைக் கூறிப் புன்னகை புரிந்தார். ஆம். Photostat copy ஒளி நகல். ஆதி மூலமே என்று ஓலமிட்ட கரிக்கு உதவிய உயர்நிலையை எய்தி விட்டார் ஏர்வாடி அவர்கள்.

Perfect market என்னும் பெயரைப் பார்ப்போம். Perfect என்னும் சொல் மிகமிகத் தொல்லைதரும் ஒரு சொல்லாகும். ஏனென்றால் யாருமே perfect ஆக இருப்பதில்லை ! எவ்வளவுதான் அன்பாகவும் அக்கறையாகவும் நாம் மொழிபெயர்ப்புகளை அமைத்தாலுங்கூட, இது சரியாக அல்லது சிறப்பாக அமையவில்லையே என்று பலர் தாங்களும் அல்லற்பட்டு நமக்கும் தொல்லை கொடுப்பார்கள் ! மூர் அங்காடி தெரிகிறது, சிந்தாமணிச் சிறப்பங்காடி தெரிகிறது, ஆயினும் Perfect market தெரியவில்லையே என்று இடர்ப்பட்டோம். வங்கி அதிகாரிகளின் அழகிய விளக்கங்களினிடையே சிந்தனைக் கடலில் மூழ்கினோம். ''நிறைசீர் அங்காடி'' என்னும் நன்முத்தை ஏந்தி வந்தோம்.

Office-bearer ஐ எல்லாருக்கும் தெரியும்! நான், நீ என்று போட்டியிடுவார்கள்! அதைச் சிறிது தமிழில் சொல்லுங்கள் என்று கேட்டுவிட்டால், திகைப்பார்கள். பாரத ஸ்டேட் வங்கியோ இதை எந்தவித முயற்சியும் இல்லாமல் ''பதவிப் பொறுப்பாளர்'' என்று அமைத்துள்ளது. Office-bearers—இவர்கள் பதவியைப்பற்றி நினைப்பதைவிட பணியைப்பற்றி நினைப்பது பயனுடையதாகுமன்றோ? ஆகவே இவர்களை ''அலுவல் பொறுப்பாளர்கள்'' என்று அமைத்து விடலாமா என்று ஆய்ந்துவருகின்றோம்.

ஒரு முக்கிய கருத்தை இந்தக் கட்டத்தில் கூறவிரும்புகின்றேன். முழுமணி போன்ற கருத்தாகும் அது. வங்கித் துறைக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த சொற்கள் நிறைய இருக்கின்றன. நீண்ட நெடிய வழக்கினால் நுண்ணிய பொருளை அவை ஏற்றுத் திண்ணிய நிலையைப் பெற்றுவிடுகின்றன. வங்கிக் கலைச்சொற்களுக்கென்றே விளக்க உரைகள் பகர்கின்ற ஆங்கில நூல்கள் கண்ணைப்பறிக்கும் அழகுடன் நிறைய இருக்கின்றன. சிந்திக்கவைக்கும் சிறப்புப் பொருள்களை அவற்றில் கண்டு களிக்கலாம். அவற்றைப் புரட்டுந் தோறும் இத்தகைய அழகிய நூல்கள் நம் அன்னை மொழியில் எப்போது வருமோ என்னும் ஏக்கத்தையே எனக்கு உண்டாக்கும்.

ஆட்சிமொழி, சட்டமொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் பழக்கமுள்ள எனக்கு இவற்றினிடையே தோன்றும் நுட்ப வேறுபாடுகள் பெருமகிழ்ச்சியை அளிக்கும். ஓர் ஆங்கிலச்சொல் ஆட்சிமொழியில் ஒரு பொருளைத் தந்து, அதே ஆங்கிலச் சொல் சட்டமொழியில் வேறுபொருளைத் தந்துநிற்கும். இதேபோன்று வங்கிமொழியிலும் பல சொற்கள் அமைந்திருப்பதைக் கண்டு களித்தேன். Tag என்னும் சொல் ஆட்சிமொழியில் ''இணைப்பு நூல்'' என்னும் பொருளைத் தருகின்றது. ஆயினும் இதே சொல் வங்கிமொழியில் ''குறிப்பீட்டுச்சீட்டு'' அல்லது ''அடையாளச்

சீட்டு'' என்னும் பொருளைக் கொடுக்கின்றது. Lien என்பது முக்கியமான இன்னொரு சொல். இதற்கு ஆட்சிமொழியில் ''மீள் உரிமை'' என்று சொல்வார்கள். அதாவது ''பழைய பதவிக்கு மீண்டும் திரும்பிவருவதற்கான உரிமை.'' இதே சொல்லுக்கு வங்கி மொழியில் வேறொரு பொருள் கிடைக்கின்றது. அதாவது ''ஒருவர் பெற்றுக்கொண்ட தொகையை அவரிடமிருந்து மீண்டும் தண்டல் செய்யும் உரிமை'' என்பதாகும். ஆகவே வங்கிமொழியில் இது ''பற்றுரிமை'' என்று வடிவுபெறும். இந்த இரண்டு எடுத்துக் காட்டுகளே போதுமானவை என்று கருதுகின்றேன். ஆழம் தெரியாமல் காலைவிட்டால் அகப்பட்டுக்கொள்வோம் என்று மட்டும் சொன்னால் போதாது, அடித்துச் செல்லப்படுவோம் என்று தான் சொல்லவேண்டும்.

ஏதேனும் ஓர் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் அமையவில்லை என்று வைத்துக்கொள்வோம். அந் நிலையில் ''இதற்குப் பொருத்தமான சொல் திருக்குறளில் கட்டாயம் இருக்கும்'' என்று சொல்லிக் குழு உறுப்பினர்கள் முழக்கம் செய்வார்கள். திருக்குறள் ஒரு வற்றாத ஊற்று. திருவள்ளுவர் எல்லா மக்களுக்கும்—ஏன்—எல்லாத் துறைகளுக்கும் உதவும் அமுதசுரபி.

''நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.''

இந்தக் குறளில்வரும் ''செறிவு'' என்னும் சொல்லிற்கு நாளெல்லாம் பொருள் சொல்லலாம். அஃது ஓர் இலக்கிய ஆராய்ச்சியாக முடிந்துவிடும். அது ஈண்டு நமக்குத் தேவையில்லை. ''பெரிய வர்கள் இருக்கின்ற அவையிலே அவர்கள் பேசுவதற்கு முன்பு, சிறியவர்கள் பேசமுனைதல் ஆகாது. பெரியவர்கள் தங்கள் கருத்து களைத் தெரிவித்த பின்னரே, சிறியவர்கள் பேசத் தொடங்குதல் வேண்டும்.'' இந்தக் குறளில் வருகின்ற ''முதுவர்'' என்னும் சொல்லை உற்றுநோக்கினால், அது இக் காலத்தில் பெருவழக் காகவுள்ள Senior என்னும் சொல்லுக்கு ஏற்ற சொல்லாக இருப்ப தைக் கண்டு களிகூரலாம். Senior கள் இருக்கும் அவையிலே Junior கள் முந்திக்கொண்டு பேசுதல் ஆகாது.

இப்போது வெளிவரவிருக்கும் வங்கிக் கலைச்சொல்லகராதி, அகராதிக்கலையின் வரலாற்றிலே ஒரு land mark ஆக விளங்கும் என்று உரைத்தால் அது முற்றிலும் உண்மையாகும். Land mark என்னும் இந்தச் சிறிய தொடருக்குத் தமிழ் என்ன? Mile stone என்று வந்தால் ''மைல் கல்'' என்று எளிதில் கூறிவிடுவோம். ஓர் அகராதியில் பார்த்தேன். Land mark என்றால் ''நிலக்

குறியீடு'' என்று கண்டிருந்தது. ஓரளவு நன்ருக இருந்தாலும், உயர் அளவை இது எட்டிப் பிடிக்கவில்லையே என்று எண்ணினேன். குழு உறுப்பினர் ஒருவர், குறுகத் தறித்த குறளிலேயிருந்து ஒரு பாவினை மிடுக்காகப் பாடிக் காட்டினுர்.

''நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்ருது புத்தேள் உலகு''

''நிலவரை'', ''நீள்புகழ்'', ''புலவர்'' என்னும் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிப்பார்த்தால், புதுப்புதுப் பொருள்கள் அரும்புவதைக் காணலாம். நீள்புகழுக்குரிய பெரும்புலவர் வள்ளுவர் ''நிலவரை'' என்னும் சொல்லை நமக்கு அருளியுள்ளார். அதுதான் Land mark ஆகும்.

Absentee landlord என்னும் தொடர் இன்று அடிக்கடி பேசப்படும் தொடராகும். ''நிலத்தை நேரில் சென்று பார்க்காத நிலக்கிழார்'' என்பதுதான் சரியான கருத்து. இதனைச் சுருக்கி உரைத்தால், மொழிபெயர்ப்பில் நாம் முன்னேற்றம் காணமுடியும். இதற்கும் வள்ளுவரே வகைசெய்கின்ருர்.

''செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்''

இல்லாளைச் சென்று பார்க்காத கணவனும் நிலத்தைச் சென்று பார்க்காத நிலக்கிழாரும் ஒரே நிலையில் உள்ளனர் என்று படம் பிடிக்கிருர் வள்ளுவர். செல்லா நிலக்கிழார் காலப்போக்கில் செல்லுபடியாகாத நிலக்கிழாராக மாறிவிடக்கூடும்! செல்லா நிலக்கிழார் = Absentee landlord.

பதினுன்காயிரம் சொற்கள் என்று தொடக்கத்தில் குறிப்பிட்டேன். அது இப்போது பதினைந்தாயிரம் என்று வளர்ந்துள்ளது. இது மேலும் பெருகும், செம்மை பெறும் பிறந்து வளரும் பெரிய பணியாகும் இந்தக் கலைச்சொற் களஞ்சியம்,

இனிய, எளிய, தூய தமிழ்ச் சொற்களுக்கு நாங்கள் முதலிடம் தந்துள்ளோம். இலக்கண வரம்புகள் உடைய உயர் மொழி தமிழ் மொழியாகும். இனிமைக்கே எடுத்துக்காட்டாய் இலங்குவது அதுவேயாகும். அந்த இனிமையைக் காப்பதில் நாங்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுள்ளோம். பிற மொழிச் சொற்கள் மிகுதியாகக் கலவாமல், உரமான தமிழ்ச் சொற்கள் அமைத்திருத்தல் இந்த அடிப்படையிலேதான். நமது அன்னை பிறருக்கு வாரி வாரி வழங்கியிருக்கின்ருள். அதே போன்று பிற மொழிகள் நமக்கு வழங்கியுள்ள வளங்களையும் நாங்கள் மறந்துவிடவில்லை. ஏறக்குறைய

எல்லா மொழிகளுமே எப்போது பிறந்தன என்று கணக்குக் காட்டி விடலாம். ஆயினும் தமிழன்னை என்று பிறந்தவள் என்று யாராலும் சொல்லவே முடியவில்லை. கவிஞர் திருச்சி தியாகராசன் அவர்கள் நம் அன்னையின் பெருமையை அழகுறப் படம் பிடிக்கின்ருர் :

"பிறந்த நாளைத் தெரிந்து சொல்ல
எவருமே இல்லை—வயது
பெருகப் பெருக அழகு இன்னும்
குறையவே இல்லை"

என்பது அவருடைய வாக்காகும். இந்த அகராதியின் முதற்பதிப்பு இப்பொழுது வெளிவருகின்றது. இது மேலும் மேலும் வளம் பெற்று வருகின்ற பதிப்புகளிலே செவ்விய தமிழ்ச் சொற்கள் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழியிலே எத்தனை நூல்கள் இருக்கின்றன என்ற சரியான கணக்கை யாரேனும் காட்ட இயலுமா? இயலாது என்று கூறுகிருர் கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் அவர்கள். தமிழ்த்தாய் வாழ்த்தாக அவர் பாடியுள்ள பாடல் சுவைமிக்க பாடலாக மிளிர்கின்றது.

"வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே
மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே
தேனூர்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி
கானூர்ந்த தேனேகற் கண்டேநற் கனியே
கண்ணேகண் மணியேஅக் கட்புலம்சேர் தேவி
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே
அம்மேநின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே"

என்று பாடுகின்ருர் அவர். கடைசி இரண்டு அடிகளையும் கவனமாகப் பார்க்குமாறு வேண்டுகின்றேன். தமிழ் நூல்கள் கடல்போலக் காட்சியளிக்கின்றன என்னும் கருத்தைத் தெளிவாகக் காட்டுகின்ருர் அவர். இத்தனை நூல்களையும் இப் பிறவியிலேயே படித்து முடித்து விடுதல் இயலுமா எனின், இயலாது என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்துள்ளது நாலடியார்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து."

இந்தப் பாடலில் ''தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே'' என்று வழி ஒன்றைக் காட்டுகிறது நாலடியார். கற்பவர்களின் நாட்கள் சிலவாக இருப்பதால், நல்ல நூல்களை மட்டும் தேர்ந் தெடுத்து அவற்றை ஐயந்திரிபறக் கற்றுப் பயன்பெறவேண்டும் என்பது நாலடியார் காட்டும் நன்னெறியாகும். அத்துடன் நான் ஒரு சிறிய வேண்டுகோளையும் சேர்க்க விரும்புகின்றேன். அஃதாவது எந்த நூலைக் கற்க நேர்ந்தாலும், அந்த நூலை மீண்டும் ஒரு முறை, கலைச்சொற் கண்கொண்டு நோக்கவேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாகும். அவ்வாறு நோக்கின் பெரும் புதையல்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.

இன்றுவரையிலுள்ள நிலைமைகளை எண்ணிப்பார்த்தால், பழைய அகராதிகளே நமது பார்வைக்குக் கிடைத்து வருகின்றன. புதிய அகராதிகள் கிடைப்பதில்லை. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி 1926—27 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன்பின்னர் அந்த அகராதியின் ஒளி நகல் (Photostat copy) அண்மையில் வெளிவந்துள்ளது. அதாவது திருத்தங்களோ புதிய சேர்ப்புகளோ எவையும் இல்லை. இதே போன்று 1965 ஆம் ஆண்டு வெளிவந்த ''ஆங்கிலத் தமிழ் அகராதி''யும் மீண்டும் வெளியிடப்பெற்றுள்ளது. இதிலும் புதிய சொற்களும் புதிய மொழிபெயர்ப்புகளும் இடம் பெறவில்லை. இந்த முறையிலேதான் பல்வேறு அகராதிகள் தமிழில் வெளிவந்துகொண் டிருக்கின்றன. அவை யாவும் பிறந்த மேனிக்கே, இருந்த இடத்தி லேயே இருக்கின்றன! ஆமை வேகத்திலே, நத்தை வேகத்திலே கூட அவை நகர்வதில்லை.

ஆங்கில மொழியின் வளர்ச்சியோ முற்றிலும் மாறானதாகும். ஒவ்வோர் ஆண்டும் புதுப்புது அகராதிகள் வெளிவருகின்றன. பழைய அகராதிகள் திருத்தம் செய்யப்பெற்று ஒவ்வோர் ஆண்டும் கண்ணைக் கவரும் வனப்புடன் வெளிவருகின்றன. துணை அக ராதிகள் தொகுதி தொகுதியாக வெளிவருகின்றன. அழகிய புத்தம்புது அகராதிகள் அன்றாடம் வந்து குவிகின்றன.

இந்த முறையில் தமிழிலேயும் அகராதிகள் வெளிவரவேண் டும் என்பது என் கோரிக்கையாகும். பழைய அகராதிகள் திருத்தப் பெற்று, செப்பம் செய்யப்பெற்று, ஆண்டுதோறும் வெளிவர வேண்டும். அவற்றில், புதிதாகப் புனையப்பெற்ற ஆட்சித் துறைச் சொற்களும், சட்டத் துறைச் சொற்களும், பிற துறைச் சொற்களும் இடம்பெற்று, வளம் கொழிக்க வேண்டும். பாரத ஸ்டேட் வங்கி இந்தப் புதிய அகராதியின் புதிய பதிப்புகளை அடுத்தடுத்து வெளி

யிட்டு அன்னை மொழிக்கு அயராது பணியாற்றும் என்று உறுதியாக நம்பலாம்.

புதிய அகராதியின் பெருமைகளையெல்லாம் போதுமான அளவிற்கு விளக்கிக்காட்டியுள்ளேன் என்று நான் கருதுகின்றேன். "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்னும் முறையில் இன்னும் ஒரு சில சொற்களை மட்டும் உங்கள் முன் வைக்கின்றேன்.

Balance sheet = ஐந்தொகைக் குறிப்பு.

Cell = சிற்றம்

Crossing efficiency bar = திறன் வரை கடத்தல்.

I beg to state = நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

I shall be obliged = நான் மகிழ்வேன்.

Method = வகைப்பாட்டு முறை.

Receipt = கொள்சீட்டு.

Scheme = சமை திட்டம்.

Short credit = விரைவு வரவுகள்.

System = அமைப்பு முறை.

Task Force = விரைவுப் பணிக்குழு.

Tenor of the bill = உண்டியலின் தன்மை.

சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்காமல் கருத்துக்கு மட்டும் முதலிடம் தந்துள்ளோம் என்பதை எளிதில் புரிந்துகொள்வீர்கள்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. "எச்சம்" என்னும் சொல்லுக்கு "மக்கள்" என்று பொருள் கண்டார்கள் பழைய உரையாசிரியர்கள். இதே சொல்லுக்கு "இசை" அல்லது "புகழ்" என்று பொருள் கொண்டார்கள் அண்மைக்கால ஆராய்ச்சியாளர்கள். இந்த இரண்டாவது கருத்திற்கு அகச் சான்றுகள் நிறைய இருக்கின்றன. இப்போது நான் வேறொரு பொருள் காண விழைகின்றேன்! "எச்சம்" என்பது அவரவர் இயற்றும் அரிய நூல்களாகும்! அந்த வகையிலே இந்த அரிய அகராதியை உங்களின் திருக்கரங்களிலே தவழவிட்டிருக்கின்றோம். தீர்ப்புக் கூறுங்குவீர்களாக! தெள்ளிய சொற்களை அமைக்கும் பணியில் அனைவரும் தோள்கொடுத்து உதவுவீர்களாக!

இந்த அகராதி குறித்து இறுதியாக ஒரு சொல்! சுவைமிக்க பொங்கலைப் போன்றது இந்த அகராதி. புதுமைக் கலைத்துறைகள் யாவும் பொதிந்துள்ள கருவூலமாகும் இது. வங்கிக் கலைச்சொற்களை வகைப்படுத்தி வெளியிட முன்வந்துள்ள பாரத ஸ்டேட் வங்கிக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. உயர்திரு. கபில் தேவ் நய்யார் அவர்களின் புகழ் ஓங்குக. வங்கித்தமிழ் பொங்கிப் பொலிவுபெறுக.

அப்பர் அச்சகம், சென்னை-105.